Words of Peace.

Vol. I.] சாந்தி வசனம். [No. 4 & 5.

சத்தியத்திற்குமேலான தருமமில்லை.

ஸ்ரீமான்: ஜினராஜ தாஸர் அவர்களால்
இயற்றப்பட்ட

IN HIS NAME

அவன் பெயரால்

எனும் அரிய நூல்

திருமியச்சூர் ப்ரம்மஞான சங்கம் காரியதரிசி
R. ஸ்வாமிநாதய்யர் வேண்டுகோளால்
மொழிபெயர்க்கப்பெற்றது.

Published by
A. RATNASABHAPATHI MUDALIAR, *F. T. S.*,
Sânthi Asramam T. S., Tirumiyachoor,
Peralam Post, TANJORE Dist.

OCTOBER & NOVEMBER 1916.

திருச்சிராப்பள்ளி
...ர்" அச்சுக்கூடத்தில் அச்சியற்றியது.

...d.] [விலை அணா 4.

R6
N16.
183657

ஸ்ரீ

ஜகத்குரு ஸ்தோத்திரம்.

ராகம்—ஆரபி தாளம்—ஆதி.

சங்கரனே சங்கரனே சம்போகெங்காதரனே.

குருவாகி வந்தெமது குறைநீக்கி யருள்புரியுந்
திருவான ஜகத்குருவே தினந்தினமுங் கருணையொடு
வருமாறு தொண்டுசெயும் மைந்தரெமை வான்மதிபோன்
றுருவாகி வந்தருள்வாயுத்தமனே யறவரசே

அந்தணனே வேதியனே யருமறையின் காரணமே
சுந்தரனே ஜகத்குருவே சுகமருளுங் கற்பகமே
மேற்றிசையின் மன்னவர்கள் வெறிகொண்டே யவர்புரியும்
கூற்றுலவுஞ் சமர்நீக்கிக் கொடுத்திடுவா யருளதனை

நாற்றிசையும் புகழ்பெருகும் நாயகனே குருநாதா
போற்றிபுரி யடியேமுன் பூசுரனே வந்திடுவாய் அந்தணனே
உன்னுடைமை யானதொரு உலகமெலாம் வெங்கலியால்
சொன்ன பொருளறியாமல் துயர்மிகவுங் கொண்டலைய

அன்னதனைக்கண் ணுற்றே யருள்புரிய வந்திடுவாய்
இன்னமொரு சொல்லுண்டோவிறைவ வெள்ளியம்பலத்தாய்
அந்தணனே

சாதிமதமொன்றென்னுந் தன்மையறியாதவர்கள்
வாதுசொலிச் சூதுசெயும் மாயவினை யறுத்திடுவாய்
ஆதிமறை யுருவான அந்தணனே எங்குருவே
நீதி சகோதரத்துவத்தை நிலைப்பிக்க வருவாயே அந்தணனே

கோவிந்தராஜையங்கார்.

315
215.2

இஃது

'கூட்ஹூமி' யெனும் நாமதேயத்தை வஹித்த

ஸ்ரீ குருதேவனுக்கு

அவனது பாதகமலங்களிலன்புள்ள அவன்மைந்தனால்

அர்ப்பணஞ்செய்யப்பட்டது;

அட்டவணை.

முன்னுரை	பக்கம்	3
நித்தியா நித்திய விசாரம்	,,	5
ஸ்ரீ குருதேவர்	,,	15
கடவுள் வகுத்த பிளான் அல்லது ஒழுங்கு ...	,,	19

முன்னுரை.

—[o]—

30 MAR 1917

W. H. என்பாருக்கு :—

நீரும் நானும் சென்ற தடவை ஒரே மணி நேரந்தான் சந்தித்து வசனித்தோம். ஆயினும் நும்மைக்கண்ட அந்நிமிஷமே நும்மிடம் யான் தெரிவிக்கவேண்டிய முக்கியமான விஷயமொன்றுளதென என் புத்திபிறப்பட்டது. அச்செய்தி யாதென்பது பின் வருவனவற்றால் நுமக்கே விசதமாகும்.

உலக வாழ்வில் நீர் அடைந்திருக்கும் பரிபாக தசையை உற்று நோக்கின், இனி முழுமையும் நாம் உலகியலில் மூழ்கியிருத்தலமையாதெனத் தானே உணர்ந்து தெளிந்துகொள்ளும் தருணம் நுமக்கு வாய்த்திருப்பது தோன்றுகின்றது. நீர் இப்பொழுது ஒரு கவுரவமான தொழில் முறையில் நிலைத்திருக்கிறீர். இவ்வழியிற் சிறிது காலஞ்சென்றால் விசேட கீர்த்தியுஞ் செல்வ முதலியவைகளும் தானே உமக்கு வாய்க்குமென்பது நுமக்கே தெரிந்தவிஷயம். ஆயினும் அவ்விதங் கேவலங் கீர்த்தி முதலியவற்றைமட்டுமே நாடித் தொழில்புரிதல் அடாது என்பது இவ்வாரம்பத்திலேயே நுமது புத்தியின் நாட்டமாகின்றது. உமது தொழிலில் நீர் மிகவும் உயர்லக்ஷியம் கொண்டவராகி, நுங்கருத்திலுறையும் அந்நோக்கத்திற்கு சிறிதேனும் பழுதுவராமல் உழைப்பதில், எவ்வகைத் தீமையு மிழிவும் வரினும் அவற்றைப் பொருட்படுத்தாது, நாட்கழிக்க விருப்பமுள்ளவர். இக்காலத்தில் இவ்வுயர் நோக்கங்கொண்டாராய் வாழும் மாணிடர் பலருண்டு. அவர்போல் நீரும் ஒருவரேயாயினும் மற்றவரிடமில்லாததோர் விசேடகுணமொன்று நும்மிடத்திற் காணப்படுகின்றது. அஃது யாதெனில் கூறுவேன். நுங்கருத்திற் குடிகொண்டாளும் மேற்கூறிய உயர் நோக்கம் போல்வது கேவலம் மனிதரின் பாவனையில் வசிக்கும் ஓர் நினைவேயன்றி, அஃது உண்மையில் விளங்கப் பெறுவோராய மானிடர் எங்கேனு மிருப்பரென்று எண்ணவேண்டியதில்லை என்பது உலகினர் பெரும்பாலரின் துணிபாதலின், அவ்விதமின்றி அவைபோன்ற உயர் குணங்களைத் தன் சுபாவமாய் அமையப்பெற்றவரும், ஸ்ரீ குருநாதனென்ன அழைக்கப்படத் தகுந்தவரும் ஆகிய மகா புருஷர் ஒருவர் நிச்சயமாயுளரென்பதும், அவரது பெருவாழ்வின் சந்தங்கமழ்தலெனச் சொல்லத்தகும் அவர்

பாதத்தின் பிரதமதிருஷ்டியே அவ்வுயர் நோக்கத்தின்கண் நமது மனப்பற்றின் நிகழ்விற்குக் காரணமென்பதும், நீர் அறிந்த விஷயம் அன்றோ. இத்தகைய குருநாதரெனு மொருவருளரென்பது வாஸ்தவமாதலின், அவரை மட்டும் பிரத்யக்ஷமாய்க் காணும் பாக்கியம் கிடைக்கப்பெறின், அக்காலை அவருக்கே முழுவது மாட்பட்டு அதனால் யாதுவரினும் கருதாது அவருக்கே மாறுவடிமை பூண்டு ஒழுகச் சித்தமாதலும் உமக்குச் சம்மதமாகு மென்பதையும் நானறிவேன்.

இனி இக்குருநாதனும் பரமயோகியாதலின் அவரோடுமிணைதற்கு வேண்டிய தியானசமாதிகளைச் சாதிக்கும்பொருட்டு உலகந் துறந்து காடுமலை குகையாதி தனிமையிடங்களை நாடிச்செல்லல் அமையாதென்பதும் உமக்குத்தெரிந்த விஷயமே. ஏனெனில் தஞ்ஜீவனோபாயத்தின் பொருட்டும்மை அண்டிநிற்கும் நுங்குடும்பத்தார் சிலர் உளராதலின் அவர்களைத்தள்ளிவிட்டு உம்முடைய க்ஷேமத்தை மாத்திரம் தேடும்படி அத்துணை சுவாதீனம் கருமத்தால் நுமக்கேற்படவில்லை. அவர் பொருட்டு உலகத்தின் தொழில் முறையில் நீர் பிரவேசிக்கவேண்டியதவசியமென நீயறிவீர். ஆயினுமவ்விதமாய குடும்ப பாரங்களைத் தாங்கிவரும்பொழுதுங்கூட, நும்மால்முடியும்வரை குருதேவனது சேவையை எவ்வழியிலாயினும் புரிந்துவர வேண்டுமென்பதுவே நமது கருத்தாகும். இக்கருத்து நிறைவேறுதற்கேற்றவழியொன்றிருப்பதுபற்றியே யானும் பின்வரும் வசனங்களை நும்பொருட்டும், நுங்கருத்திற் பட்டிருக்குமிவ்வுயர் நிலையை சிறிது நோக்கி ஆசைகொள்ளும் ஏனையவுலகினர் பொருட்டும் எழுதலுற்றேன்.

மானிடருள் ஒவ்வொருவரும் மற்றெவ்வொருவருக்கும் தெரியப்படுத்த வேண்டியதான விஷயமேதேனு மொன்றவசியமிருத்தலேவேண்டுமாதலின் யானும் நும்மைநோக்கி இச்சமயத்தில் வெளிப்படுத்திக்கூறவேண்டிய விருத்தாந்தமும் இதுவேயாகும். இஃதுண்மையில் எனக்குச் சொந்தமானதன்று. பிறரிடமிருந்து எனக்கும் கிடைத்ததுவே. அவர்கள் எனக்கதையளித்தவாறே நானுமும்மை எனதுசகோதரனாய்ப்பாவித்து இவ்விஷயத்தைத் தெரிவிக்கலுற்றேன் எனக்கொள்க.

C. J.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
18267

அதிகாரம் 1.

நித்தியாநித்திய விசாரம்.

ஸ்ரீ குருநாதரைத் தேடியடைய விரும்பும் நீர் பெரும்பாலுமி வ்வுலகத்தை யொட்டியவராகவே யிருத்தல் அவசியமேயாயினும் உண்மையில் அதற்குப்புறம்பே போந்தவரேயாவீர். ஆதலின் ஆரம்பத்திலேயே நித்தியம் அநித்தியமென்பவை யாவை யென்பதை விசாரித்துத் தெரிந்துகொள்ளல்வேண்டும்.

நமது வாழ்விடமாகிய விப்பிரபஞ்ச முழுவதுமே கடவுளின் ஓர் பெரிய தோற்றமேயன்றி வேறன்றாதலின், ஆராய்ந்து பார்க்கின் சாசுவதப்பொருளாகிய கடவுளின் பிரகாசமேயான இப்பிரபஞ்ச முழுமையிலும் அழிவுடையதுமநித்தியமுமான வஸ்துவேகிடையாது. ஆயினும் அக்கடவுளின் தோற்றங்கள் பலவிதங்களாயிருத்தல் உண்மையாதலின், நாம் நாளடைவில் அபிவிர்த்தியடைந்து வரும் பொழுது, கடவுளின் ஓர்வகைத்தோற்றங்களை விட்டு மற்றோர் வகைப்பிரகாசங்களைக் கண்ணுறுகின்றோம். நமது பரிபாகம் முதிர்ந்து வருங்காலை ஒரு படியிலுள்ள தோற்றங்களை நீக்கி மற்றோர் படியின் ரூபங்களை தரிசிக்க நேருமன்றோ! அவ்விதம் கீழ்ப்படியின் நிலைகளைத் தாண்டி மேநிலையின் வியவஹாரங்களைத் தலைக்கொள்ளும் பக்குவம் நமக்கு வாய்க்குந்தருணத்தில் அவ்வுயர் பதவியே நித்தியமானதாகவும், நாம் சற்று முன்வரை யனுபவித்திப்பொழுது தாண்டியிருப்பதுவே அநித்தியமானதாகவும் ஏற்பட்டுவிடுகின்றது.

இவ்வுண்மை உலகினர் யாவருக்கும் பொருந்துமாயினும் நமக்கு விசேடப் பொருத்தமுடையது. அஃதெவ்விதமெனில் கூறுவாம். நீர் வசிப்ப திவ்வுலகமேயாயினும், மேல்பதவிகளில் பிரக்ஞையை யனுபவிக்கவும் வியவஹாரங்களைப் புரியவும் தக்கதாகிய பக்குவமுமக்கு வாய்த்திருப்பதால் நீரிப்பொழுது இவ்வுலகத்தைச் சற்றுத் தாண்டியே நிற்பவர் ஆகின்றீர். ஆதலாற்றான் உமக்குயர்லக்ஷியம் படிந்தவுள்ள மேற்பட்டிருக்கின்றது. உயர்லக்ஷியம் என்பது நம்மைச் சூழ்ந்திருக்கும் வெளியுலகத்தோடு ஐக்கியமுற்றுக் காலங் கழித்துவிடாமல், இதற்குமேலுள்ள பதவியிலீடுபட்டு அதன் சிறப்

பிற்கு வசப்பட்டொழுகும் உறுதியைக் கடைப்பிடித்தலேயாகும். இனி முக்தனுங் குருதேவனையடைய முயல்வோரும் இவ்வுயர் லக்ஷியமுடையோராதலே வேண்டும். அவ்வித வொழுக்கத்தாலடையு மனுபவங்கள் ஒரு ஜீவதசையில் ஏனைய சாமானிய மானிடர் பெறுவனவிற்கு மிகவு மதிக்கப்பட்டவைகளேயாகு மென்பதற்கு ஐயமுண்டோ? மற்றவர்க்கு நீண்டகால வரம்பிற் கிடைப்பதாயினும் இப்பெரும் பாக்கியம் சமீபத்திலேயே நீர் அடையவிருக்கு மடுத்தபடியில் நுமக்குக் கிட்டுவதாயிருப்பதை; நீர் அறிந்துகொள்ளல் வேண்டும்.

ஆதலின் நீர் ஆராய்ந்து தெளிந்துகொள்ளவேண்டியது யாதெனில், பாஹ்யமான விவ்வுலகம் நுமக்கத்தனை முக்கியமானதன்று, பின்னை யிவ்வுலகத்தைப்பற்றிய நமது பாவனையே முக்கியமானதென்பதே. ஒருவாறு சிந்திக்கின் இஃது உலகினர் யாவருமே யறிந்துகொண்ட வுண்மையேயாயினும், நீர் பன்முறையுமதிக கவனங்கொண்டு இக்கருத்தை வளர்த்து வருவீராயின், தன்னறிவுடன் இரண்டுலகங்களிலும் சதாகாலமும் வசிப்போராவீர். இவ்விரண்டுலகங்களாவன:— ஒன்று உமது தொழின்முறையில் இதர மானிடருடன் நீர் கலந்துறவாடி அவசியமான கடமைகளை நிறைவேற்றிவருமுலகம். மற்றொன்றோ இதேயுலகத்தை சாமானியர்களின் மாயை கலந்த திருஷ்டியோடல்லாது நூதனமாய பாவனைகள் மூலமாய் உயர் லக்ஷியத்தாற் கொண்ட நும் கனுக்கள், மனோவிர்த்திகளிவையாவும் பூர்த்தியாகுமிடமாய் விளங்கும் பதவி யெனலறிதலே.

மானிடர் தம்முலக வாழ்க்கையிற் பிரதி தினமுந் தங்கருத்தாற் சிருஷ்டி செய்துகொள்ளுமுயர் நோக்கங்கள், ஆனந்தங்கள், (நம்பிக்கைகள்). மனோராஜ்ஜியங்களிவையாவும் கேவலம் கனவிற்காணும் பொய்க்காக்ஷிகளேயன்றி யவற்றுள் கடுகளவேனும் பயனென்பதில்லை யென மயங்கிவருதலே பெரியதோர் பிசகாகும். உண்மையில் இக்கனவுகள் நம்பிக்கைகளிவை, மேலுள்ள நித்திய வுலகின் ஞாபகத்தை நமக்கு வருவிப்பனவாகிய அதன் பிரதம திருஷ்டிகளேயாகும். நமது பஞ்சேந்திரியங்களாற் கோசரிக்கப்படுவதும், நமது

ஜீவனோபாய வழிகட் காதாரமாவதுமான இவ்வுலகமே யுண்மையில் அநித்தியமானதென்பதற் கையமுளதோ? இதனால் அநித்தியமான இவ்வுலகமினி நமக்கவசியமில்லை யென யான் கூற வரவில்லை. பின்னை யிதனால் நமக்குறும்பயன் நாம் பக்குவத்தாற் கைக்கொண்ட அநித்திய வுலகையே பொருத்ததாக விருக்கிறதென்பதுவே என் கருத்து.

இனி மேனிலையாம் நித்தியவுலகமென்பது நமக்கு நாற்புறத்திலும் நிரம்பி எப்பொழுதும் விளங்குவதாயினும், சிற்சில வபூர்வ சமங்களில் நாம் நமது சகல கவலைகளையுமகல விட்டோட்டிச்சாந்தமுஞ் சந்தோஷமு நிரம்பிய வுள்ளங்கொண்டு, மனோராஜ்ஜியம் புரியவாரம்பித்துப்பெருநோக்கங்களாகும் ஆகாசக்கோட்டைகள் கட்டத் துடங்குந் தருணங்களில் மட்டுமே அஃது நம்திருஷ்டிக்கு சிறிது சிறிது புலப்படுகின்றது. மேற்றிசையாரது பிரத்தியக்ஷ விசார சோதனைகளில் ஒன்றாவது: ஓர் பெரிய ஜாடியினுள்ளிருக்குங் காற்றை குழாய் மூலமாய் வெளியேற்றி யங்கு காற்றில்லாமற் செய்தால் அப்பொழுதுதான் பரமசூட்சும வஸ்துவாகிய காற்றுக்கும் பளுவல்லது கனதையுண்டென்பது தெரிகின்றது. அதுபோல் இவ்வுலகமணங் குன்றினாலல்லது நித்தியமாய அவ்வுலகத்தின் திருஷ்டியுங் கிட்டாதென்பதே யுண்மை. ஆதலின், ஐய, அவ்வுயருலகின் வாழ்வு இப்பொழுதுதான் நும்மிடம் ஏற்பட துடங்கியிருக்கின்றது. அதுபற்றியே நுமதுமனமும் இவ்வுலகின் சுபசந்தோஷாதிகளையுமோர்புறத்தே தள்ளி அவையல்லாததாகிய வேறு 'ஏதோவொன்றை' நாடித்தயங்கிநிற்கின்றது. *அஃது எதுவென்பீரோ கூறுவேன்: மற்றியாதினு மேலானதாகி, நம்முட்டங்கிநிற்கும், கடவுளின் அம்சமேயென்க. தன்னை மறந்து பிறர் எல்லார் பொருட்டும், அன்பு, தியாகம், சிருஷ்டி, பரிபாலனம் இவையாகும் பெருங்காரியங்களில் நூதன நூதனமாய் சங்கற்பித்துக்கொள்ளும்படி யும்மை யந்தரங்கத்திற்றூண்டி வரும் ஆன்மாவாகுங் கடவுளே

---

* "தந்தை தாய் மகவுமனை வாழ்க்கையாக்கை சகமனைத்து மௌனி யருடழைத்தபோதே, யிந்திரசாலங் கனவுகான நீரா, யிருந்ததுவே யிவ் வியர்கை யென்னே, யென்னே". (தாயுமானவர்).

யஸீது. * ஆதலின் ஸ்வய நலமற்று நீர் நிறுமித்துக்கொள்ளும் ஆசை நினைவுகளில் ஒவ்வொன்றும் உம்முடைய ஹிருதயக்குகையில் வாசஞ்செய்யுமான்மாவை நீர் தர்சனஞ் செய்வதற்குதவும் ஓர் ஜன்னலே யாகும்

இவ்விதவுயர் லக்ஷியமுடையோனுமொருவனுக்கு இவ்வுலகினிற்காணப்படும் பொருட்கள் யாவும் சூக்ஷ்மமாய் கருத்துக்களைத் தாங்கி நிற்றற்குதவும் பொருட்டே யேற்படுகின்றன. கருத்துக்கள் அல்லது சங்கற்பங்கள் ஒவ்வொன்றும் நமது பரிபாகமாகும் பெருநாடகமாடப்படும் சாலையான இவ்வுலகில் யாவைக்குமப்பாலுள்ள சத்தியநிலையினோடு இவ்வுலக சம்பவங்களைச்சேர்த்திணைப்பிக்குஞ் சூத்திரமேயாகும். இவ்வொவ்வொரு கருத்தும் அடங்காவாழுமுள்ளதோர் பெருங்கேணியேபோன்று, பெருக்கப் பெருக்கப் பெருகும் நிறைவைத் தன்னுள்ளடக்கி நிற்பதுவும், முதன் முதற் பார்வையில் மிகச்சிறிய துவாக தோன்றுவதுமான 'ஒன்றெ' னுமாதியெண்ணைப்போன்றுள்ளது. இவ்வொன்றுடன் பூஜ்ஜியங்களைச் சேர்க்கச்சேர்க்க லட்சங் கோடிகளான துகைகள் உண்டாதலையறியாதார் யாவர். இந்நியாயங்களால், உண்மையான நினைவுகள் யாவும் இவ்வையகத்தின் வஸ்துக்களினின்றும் பிறக்கின்றனவாகாவென்பதும், பின்னையவைகளுக்கெனத் தனியான ஸ்திதியும், மஹிமையுமுண்டெனவும் தெளிதல்வேண்டும். இவ்வுண்மையைத் தேரத் தெளிய நெஞ்சில் நாட்டிக்கொண்டாலன்றி நமது வாழ்வுமுழுவதும் வீணேயாகும்.

சாமானியமான வுலகினர் யாவரும் தம்மைம்புலன்களின் வழி சேருமனுபவங்களைத் துணையாக்கொண்டு தங்கருத்துக்களை யுத்பத்தி பண்ணிக்கொள்ளுகின்றனர். இப்புலன்கள் குறிப்பிடும் வழியே தத்தம் காரியங்களையெல்லாம் நடாத்திக்கொள்ளுமியற்கையுடையன

---

* இவ்வுண்மையையடியில்வரும் தாயுமானவர் பாசுரத்தாலுணர்க:—
"உள்ளத்தினுள்ளே யொளித்தென்னை யாட்டுகின்ற கள்ளக்கருத்தை யான் கண்டுகொண்டேன்."

ராகி, இன்னும் மற்றவிதங்களி லுத்பத்தியாகும் தமது நினைவுகள் யாவும் நிஷ்பிரயோஜனமாகுமெனக் கொள்ளுகின்றனர். இங்குதான் நீர் உலகங் கடந்து நிற்றல் வேண்டும். நமது புலன்களைந்தும் நமக்கேவல்புரியுங் கருவிகளே தவிர நம்மையே யடக்கியாளும் யஜமானர்களன்றெனச் செவ்வனே நீர் அறிந்துணருதல் வேண்டும். நீர் பாவித்துப் போற்றிவரும் நித்திய வுலகின்கண் உமக்கவசியமான சிருஷ்டிகளை நிருமித்துக்கொள்ளற்கு பாஹிய வுலகத்திய கருவிகளான விந்திரியங்கள் எம்மட்டில் உதவுமோ அவ்வளவிற்குமேல் அவற்றைத் தலையிடும்படி விடுதலுசிதமன்று. ஆதலினவற்றிற்கு ஓர் வரம்பு கற்பித்து பின்னவ்வரம்பிற்கு மேலவைவ யெழாமநிற்கும் வண்ணம் செய்துகொள்ளுதற்குப் பழகுதலும் நீர் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்களில் ஒன்றாகும்.

ஆதலின் உலகினர் அறிவின்றி யிவ்வுலக சம்பவங்களின் மகிமையைப்பற்றிப் புகழ்ந்து கூறுமிடத்து நீர் மயக்கமுறாது ஜாக்கிரதையாயிருத்தல்வேண்டும். இக்காரியங்களும் நன்றாய்ச் சோதனை செய்தபின் தக்க நிபுணர்களால் வெளியிடப்படின் உண்மையாவது வாஸ்தவமாயினும், அவ்விதம் நிஷ்பக்ஷபாதமான சுபாவங்கொண்டு தப்பு அபிப்பிராயங்கள் யாவையு நீக்கி மிகுந்த தைரியத்துடன் உண்மைகளைக் கண்டுபிடித்து வெளிப்படுத்துவது அவ்வழியில் பன்னாட் பழகியவர்க்குங்கூட வெளிதல்லவன்றோ!. அவ்விதம் யதார்த்தமானவை கிடைக்கப்பெறின் அவை கடவுளின் சங்கற்ப ரூபங்களாம் தோற்றங்களேயாகுமாதலால் அவற்றைப் பேணிப்போற்றுதலுமுமதுகடனே. ஆனால் இவ்வுண்மையான சம்பவம் அல்லது காரியம் என்பது கடவுளின் ஓர் உருவமேயாயினும், அக்காரியத்தின் உட்கருத்து அல்லது யதார்த்தமான பொருள் இவ்வுலகினுமுயர்ந்ததோர் நிலையைச் சேர்ந்ததுவேயாகுமன்றோ! வெளிப்படையான காரியங்கள் யாவும் பாஹியவுலகைச்சேர்ந்தவைகளாகவே, அவற்றின் மர்மங்களல்லது உயிர்கள்போன்று விளங்கும் கருத்துக்கள் எல்லாம் உயர் உலகினுள்ளடங்குபவைகளாய்ச் சிறப்புற்றனவாகின்றன. ஆதலின் காரியங்களைப் பார்க்கினும் அவற்றினுட்டங்குங் காரணங்க

ளான கருத்துக்களே நம்போலியருக்கு முக்கியமாகின்றனவென்பது பெறப்பட்டது.||

இனி உலகியலையொருவாறு தன் திருஷ்டியினின்றும் நீக்கி உயர் லக்ஷியத்தில் மனதை நிலைநாட்டுவோன் எவனும் சத்தியம் விளங்கும் மேநிலையின் நூதன நிர்மாணங்களைச் செய்யப்புகுந்தவனேயாவன். எம்மட்டில் இவனது நினைவுகள் யதார்த்தமல்லது அசத்தியத்தைப் பின்பற்றுகின்றனவோ, அம்மட்டில் இவனது கற்பனையவாக்களினாலுமிவன் பிரதி நிமிஷமும் ஏற்படுத்திவரும் நிர்மாணங்கள் யாவும் சாசுவதங்களாயும், அல்லது அநித்தியங்களாயுமாகின்றன. ஆதலின் நமது ஸ்தூலவுலகத்தின் மாயையைக்கடந்து மேநிலைகளின் வாழ்வைப்பெற்றுனந்திக்கவேண்டுமாயின் நாம் பல காலங்களாய் இக்கீழுலகத்தின் விஷயங்களைச் செவ்வனே குறிப்புடன் மதிப்பிட்டு வந்திருத்தல்வேண்டும். அதற்கேற்ற முயற்சிகள் யாவையெனிற் கூறுவாம்: நமது மனம் நம்மிந்திரியங்களின் துவாரமாய் வந்தடையுமறிவுகளைச் சோதித்து நிதானத்துடன் கிரஹித்துக்கொள்ளும்படி எம்மட்டில் பழக்கப்படுத்தப்படுகிறதோ, அவ்வளவு சீக்கிரத்தில் நமக்குயர் நிலையின் வாழ்வுசாத்தியமாகின்றது. நம்மிந்திரியங்களைத் தத்தம் போக்கிற் செல்லவொட்டாமல் வெளி விஷயங்களை யதார்த்தத்துடன் நமக்கு விளக்கிவரும்படி நாம் அடக்கியாளுவதால் அவ்விந்திரிய ஞானத்தா லப்போதைக்கப்போ துத்பத்தியாகும் நமது கருத்துகளும் சொப்பனமயமாய்ப் பயனற்றதாகிவிடாமல், பிரதிநிமிஷமும் நூதனசிருஷ்டிகளைச் செய்யுந் திறல்வாய்ந்தவைகளாகின்றன. ஆதலின் நம்மிந்திரியம் கொணர்ந்துவருமொவ்வொரு விஷயத்தையுங் கிரஹித்தவுடனே அதனோடு மனதைத் திடீரென வைக்கியப்படுத்திவிடாமல் *அஃதைத் தடஸ்தமாய் நின்று பரீக்ஷித்த பின்னா

|| "வாழ்வெனவுந்தாழ்வெனவு மிரண்டாப்பேசும் வையகத்தார் கற்பனை மயக்கமான, பாழ்வலையைக் கிழித்துதறிச் சேயல்போய் வாழப்பரமே நின்னுனந்தப் பார்வையெங்கே?" (தாயுமானவர்.)

* நமது மனதின் இயற்கையைப்பற்றித்தாயுமானவரும் "அறிவினைபயக்கிடும் நலெறியவொட்டாது யாதொன்று தொடினு மது வாய்த், தாங்காது மொழிபேசும்" (எனக்கூறுகின்றனர்.)

ஏற்றுக்கொள்ளும்படி பழக்கிவருவோமாயின், கடவுளின் உயர்ந்ததோர் பிரகாசமாகிய மேலுலகின் தன்மைக்கிணங்க நம்மனத்தின் கண் விளங்கும் பாவனசக்தியும் வியவஹாரம் புரியத்துடங்கி சீக்கிரத்தில் அவ்வுயர்பதவியில் நிலைபெறும்பேற்றையடையுமன்றோ!

இத்தன்மையதான நமது பாவன சத்தியானது விலாஸம்செய்யும்பொழுதெல்லாம் அவற்றின் சிருஷ்டிகள் யாவும் சத்தியத்தின் ஸ்வரூபங்களாகின்றனவென்பதை நீர் மனத்திற் கொள்ளல்வேண்டும். அவ்விதமான சுத்தத்தன்மையுடைய பாவனைகொண்டு நாம் செய்யும் நிர்மாணங்களுக்குதவும் சாமக்கிரிகள் எவையகப்படினும் பாதகமில்லை. அப்பாவனைக்கிலக்காகிய விஷயம் சாமானிய மனிதர் மேல் நாம் கொள்ளுமன்பாயினுஞ் சரி, சமயநெறியினடியாப்பிறக்கும் பக்தியின் வழிப்பட்டிருப்பினும் சரியே, அல்லதுயர்ஞானப் பேற்றையடையக்கொள்ளு மவாவாயிருப்பினுஞ்சரி, இவையத்தனையுமல்லாது சித்திரகலாவினோதக் கலவியைப்பற்றிய பேரவாவின் வடிவாயினுஞ் சரியே, இவையத்தனையும் பூர்ணமாய்ப் பிரயோஜனப்படுகின்றனவென்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதில் குறிப்பாகிய முக்கிய விஷயம் ஒன்றுமட்டுமுண்டு. அஃதியாதெனில் இவையொவ்வொன்றும் எவ்வளவல்லது பரிமாணமுள்ளது அதாவது எவ்வளவு மேன்மையுடையது, எவ்வளவு சுந்தரமல்லது அழகுபெற்றது எனுமம்சத்தால்மட்டும் வித்தியாசமிவற்றுள்ளேற்படலாமேயன்றி வேறன்று என்பதே. இவ்வித பாவனசத்தியும் சின்னாட்களின் பின்னர் நீர் இவ்வித வாஸனையற்று நிற்பதால் மறைந்துவிடக்கூடும், அல்லது நும்மிடமிச்சக்தி வரவர விர்த்தியடைந்து நாளடைவில் அதிகமதிகமான மேன்மையுமழகும் பொருந்திய வுருவங்களைச் சிருஷ்டித்துக்கொள்ளும் பக்குவத்தையளித்தலுங் கூடும். ஆயினும் இத்தகைய நிர்மாணம் ஒரு சிறுகுழந்தை தனது கனுக்களாலேற்படுத்திக்கொள்வனபோன்று சொற்ப காலமே நிலைத்து நிற்பதாயினும் சரி, அல்லது மனதும் இச்சையும் மிகவுமுயர் மேநோக்கத்திலாழ்ந்து வியவஹரிக்கத்துடங்கியபின்னேற்படும் நிர்மாணங்களைப்போல கல்பகாலத்தினுமழியாதனவாய் விளங்கினாலும்சரி, இவ்விரண்டும் மிகச்சிறந்தனவேயாகும்; ஏனெனில் இந்நிர்மாணங்களாகுங் கோயில்களில் அவை நிலைத்துநிற்குங் காலமுழுமையும் ஓர் மகா வஸ்துவானது

கருணையுடன் எழுந்தருளிப் பேர்வாக்கொள்வானையும் பெருங்கணுக் காண்பானையும் முன்னினும் பெரியது பெரியதுவாய் மானதக்கோட்டைகளைக் கட்டிக்கொள்ளும் வண்ணம் தூண்டிவருகின்றது.

இவ்வகில பிரபஞ்சத்துள்ளெங்கும் நிரம்பி வஸிக்கும் மகாபுருஷன் ஒருவனேயாகுமன்றோ! அவனே யுமது உத்தம மனோராஜ்ஜியக்கோட்டையின் மணிமாடங்களிலும் மறைந்து விளங்குவோன்.* இவ்வுண்மையைக் கைப்பற்றும்வகை யறியாமலேயன்றோ நானும் நீரும், மற்றுமுள்ள மானிடகோடிகளில் ஒவ்வொருவரும், தாந்தாம் பிறரைநீக்கித் தனிப்பட்ட ஒவ்வொரு புருஷனெனவே மயங்கியலைகின்றோம். ஆகவே நாமிவ்வுலகவாழ்வில் சுகமடைவதற்கேற்ற வழியெல்லாம் இவ்விதமாய் நாம், நாம், எனும் ‘மாயமனிதர் மயக்கி மதுமொழி’ ந்து நிற்பதேயன்றோ! நாம் பழவினையின் தடிப்பால் அகங்காரத்தினுருவமாகிய இப்பேதபுத்தியைப் போற்றிப் பாராட்டி அதை யொழித்து நிற்றல் அசாத்தியமெனச் சிந்தைகொள்கின்றோம். [] இது சாமானிய வுலகினியல்பேயாகினும் நீருமவ்வித மிருத்தல் அழகாமோ? ஐய, நீர் கலாசிற்ப வித்தையின் பயிற்சியுள்ளவராயிற்றே. நுமது பயிற்சியின் திறமையால் நூதனமான சங்கீத முதலியவற்றை சிருஷ்டித்துக்கொள்ளும்பொழுது அவற்றில் ஆனந்தத்தால் லயித்துநிற்குந் தருணங்களில் நீருண்மையே மறந்து நிற்பதும் வழக்கமன்றோ! (**Beethoven**) ‘பீத்தேவன்’ என்னுஞ்

---

* “அருட்பான்மை நெறிநின்று தவரூப்பக்குவவிசேஷராய்,
நெக்குநெக்குருகிப் பணிந்தெழுந் திருகைகூப்பிக் கண்ணருகரைபுரள
நின்றவன்பரை க்கைவிடாக் காட்சியுறவே,
கருதரிய சிற்சபையிலானந்த நிர்த்தமிடு கருணாகரக்கடவுளே!”

(தாயுமானவர்)

[] “எல்லாமுன்டிமையே யெல்லாமுனுடைமையே,
யெல்லாமுனுடைய செயலே, யெங்கணும் வியாபிநீ யென்றுசொலு
மியல்பென திருக காதிவேதமெல்லாஞ் சொல்லான் முழக்கியது,
மிக்கவுபசாரமாய்ச் சொல்லிறந்தவருவிண்டு சொன்னவையுமிவை,
நல்லகுருவானபேருந் தொகுத்த நெறிதானுமிவையே,
யல்லாமலில்லையென நன்று வறிந்தேளறிந்தபடி நின்று நாணாத
வண்ணமே யிவ்வண்ணமாயினேன்.”

(தாயுமானவர்.)

சங்கீத வித்துவாத்தினத்தின் பாடல்களில் ஒன்றைச் சிரவணஞ்செய்யும்பொழுது, அதில் ஐக்கியமடைந்து தன்னினைவையுமிழந்து கேவலமச்சங்கீதாமிருதத்தை வியந்தவண்ணமாய்ப் பொழுதுபோக்கியிருப்பதுமுண்டல்லவா? ஒவ்வோர் சமயத்தில், கடற்கரையோரம் உலாவித்திரியும்பொழுது இளந்தென்றல் வீச, வஃதை ஸ்பரிசித்துத் தன்னை மறந்தவராய், உமக்குள்ள சகல சுகதுக்க மயமான வுலக வாழ்வுடை ஜீவ சுபாவத்தையறவே நழுவவிட்டுக் கேவல மானந்த மயமாகி, தனக்குப் புறம்புமவ்வானந்தத்தையே எதிர்கொண்டு செல்லப் புறப்பட்டதுபோல் ஒரு க்ஷணமேனும் தோன்றி நின்றதுமுண்டோ? இங்ஙனம் பேருத்ஸாஹ முதலிய காரணங்களால் மிக வுயர்வுற்ற அபூர்வமான சமயங்களில், நாம் பல தடவைகளில் அடைந்திருக்குமனுபவங்கொண்டு, உண்மையில் ஆனந்தமென்பது நமது ஜீவபாவத்தின் பந்தங்கள் யாவும் ஒரு க்ஷணமாயினும் விடுபட்டு நிற்பதே யென நாமறிந்துகொள்ளலாம். புருஷனென்பான் இவ்வகிலாண்டகோடி பிரமாண்டத்திலெங்கும் ஒருவனேயுளன். அவனையறிந்து தெளிதலே நமது வாழ்வின் பெரும்பயனாகும்.

அன்றியும், நீரும் இம்மகா புருடனது பிரகாசமேயாதலின் நீரும் அவனேயாவீர்: ஆயினுமவனை பாரமார்த்திக ஸ்திதியில் அறிந்துகொள்ள வும்மாலியலாது. அப்படியறிய முயன்றால் அவனது சோதி யுமது கண்ணொளியை மழுக்கி குருடாக்கிவிடும். அன்றியும் ஊமை, வாய்விள்ளவொண்ணா வூமையுமாக்கிவிடும். ஆதலாற்றான் நம்மீது கருணையாலே தனது 'கட்டுக்கடங்காச்சோதி' யைத்தானே நம் 'மட்டுக்கடக்கி' நீர் அன்புகொள்ளும் ஜனங்களது முகங்களின் வழியாய் அவனே உம்மை யுற்றுநோக்குகிறான். ஏனெனில் நீர் நமதன்பிற்கு விஷயமாவோரை நேசிப்பதுங்கூட அஜ்ஜனங்களாம் உருவங்களில் விளங்குமவன்முகப்பற்றியேயன்றி வேறன்று.

பிறரிடம் நீர் அன்புபற்றும் வண்ணம் அவரிடமுள்ள நற்குண முதலிய வழகைப் பொருட்படுத்தும்படி நம்மை கடவுளே முதலில் தூண்டிவிடுவது, அப்பிறரிடத்துள்ளும் விளங்கும் சௌந்தரியமாதிகள் தன்னுடையனவேயாதலின் அவன் நம்மையு நேசிக்கிறானென்பதை நீர் அறிந்துகொள்ளும்பொருட்டேயென்க.

இவ்விதம் சாமானியரான மானிடருக்குந் தன்னையறிவித்துப் பின்னும், தற்பரமாகிய வன்பர் பேருத்ஸாஹங்கொடு மேனோக்க மெய்தி யருங்கற்பனுமாடங்களை நிர்மாணித்துக்கொள்ளும்பொழு தெல்லாம் அண்ணல் யின்னுமதிகமாய்த் தன்னை விளக்குவிக்கிறான்.§ யாவற்றினு மேலாய் தன்னை நினக்குக்காட்டுவிப்பது நின் குருநாதனும் வள்ளலிடமே.* இதனாற்றான் நீரும் உயர்லக்ஷியப்பற்றில் மென்மேலு மூக்கம்பெறின் நிச்சயமாய் குருநாதனை தரிசிக்கபெறலாகு மென்பதுண்மையாகின்றது. ஆகவே முடிவில் அசத்தியமான விவ்வுலகநிலையினின்றும் உம்மைச் சத்தியமாம் பதவிக்கு ஏற்றுவிக்கும் துணையாகவாய்ப்பது ஸ்ரீ குருநாதனெனும் பெருமானே யென்பது நாட்டப்பட்டது.

---

§ ' .. அறியு நல்லறிஞரெக்காலமும் முதவுவாரின் சொற்றார்,
பொய்ம்மையாமிழுக் குரையாரிரங்குவார் கொலைகள் பயிலார்,
சங்கற்பசித்த ரவருள்ளக் கருத்திலுறை சாக்ஷிநீ,
சஞ்ஞானக் கற்பகத்தேவாயிருந்தே சமஸ்த வின்பமுமுதவுவாய்...."

(தாயுமானவர்.)

* "குருவருளாலே கூடுவதல்லாற் றிருவருளுறுதெனத் தெரிந்திட வுரைத்தோன்
'குருவுருவருளெனக் கொண்டபின் குறையாப்,
பொருண்மயமாமெனப் புகன்றிடுபோதன்",

(என வருவனவற்றானுமுணர்க.)

அதிகாரம் 2.

ஸ்ரீ குருதேவர்.

நமது குருநாதனை நீர் அறிந்துகொள்ளுதற்கு எத்தனையோ கல்ப காலங்களுக்குமுன்னரே அவர் நும்மைச் செவ்வனேயறிந்து கொண்டு நும்மைக் கட்டிக்காத்து நீருமறியாதபடி யந்தரங்கத்தி லுமக்கு தைரியமூட்டிவந்திருப்பவர். மலர்கண்மீது சூரியன் தனது கிரணங்களை வீசுவதுபோல் குருநாதனும் நும்மீதுந் தஞ்சக்தியாம் கிரணங்களை எப்போதும் வருஷித்துக்கொண்டே நின்று நுமக்குத் தெரியாமலே யுமது பரிபாகத்திற்கு வழிகாட்டி வந்திருக்கின்றனர். முற்கூறியவண்ணம் நீர் உயர்பாவனையாங் கனவுகொண்டபொழு தெல்லாம் கடவுளவற்றுணின்று உமக்குத்தன் பாததிருஷ்டியைச் சிறிநுசிறிதீந்து நுமக்குத்ஸாஹமருளிய தருணங்களில் குருநாதனு மருகிலிருந்தவரே. ஏனெனில் அவர் கடவுளோடைக்கியமுற்றவ ராதலின் பரமனே தோன்றுமிடங்களில் தான் எங்ஙனம் தோன்ரு தொழிவர்? உயர்பாவனைகளைச் சிருஷ்டித்துக்கொள்ளும்படி யும் மைத்தூண்டி யவற்றிற்கு வழி கற்பித்துவந்திருப்பதும் அவரே. நும்மையே ஓர் சிறந்த வன்பனுயும், உயர்ந்த சாதுவாயும், கடந்த ஞானியாயும், உலகிலொப்பற்ற பரோபகாரியாயும் நீர் கருத்தில் பாவித்து தியானித்தபொழுதெல்லாம் அப்பாவனையிற்ரேன்றிய தோற்றங்கள் யாவும் ஸ்ரீகுருநாதனது யதார்த்தமான நிலையின் அறைகுறையான திருஷ்டிகளேயன்றிவேறன்று. அவனது பதவி யின் பிரகாசம் சிறிதளவாயினும் ஆங்குற்றதனுற்ருன், நும் கனவு கள் யாவும் அத்தனையழகு வாய்ந்தனவாயும், இவ்வநித்தியவுலகு அகிலத்தினும் மிகச் சத்தியமானவை யவைகளேயெனவும் விளங்கு வனவாயின. ஆதலின் மனத்தின்கண் உயர்வுற்ற பெருநோக்கங் களைக் கொள்ளலே குருதேவரது பாதமலர்களை முதன்முதல் தரிசித்தலாகும்.

இனிக் கடவுளோடு மைக்கியமுற்றவரேயாயினும், குருமூர்த்தி யானவர் நாடி நரம்புடைய தேகத்தோடுங்கூடி ஜீவதசையிலிருக்கு மோர் மானிடரேயன்றி வேறன்று. எண்ணிறந்த காலங்கட்கு முன் ஞல் உலகத்தில் நம்மைப்போல் சம்சார பந்தத்துணின்று பல் வகைச் சோதனைகளைப் பொறுமையுடன் தாங்கியும், காமியபொழு

183657

தடைந்துவருவதுபோலவே அநந்த துக்கங்களையு மனுபவித்தும் வந்தவரே. அவற்றையெல்லாம் காலக்கிரமத்தில் கடந்து தாண்டி முடிவாயபேற்றை யிப்பொழுது அடைந்து நிற்பவர். நமதன்பிற் கிலக்காகிய மனைவி, குழந்தை, நண்பனிவர்களைக்காட்டிலும் அவரே நமக்குக் கடவுளின் மேம்பட்ட தோர் விளக்கமாவர். ஸ்ரீ குருநாதனே நுமக்குக் கடவுளை யடைதற்குள்ள ஒரே வழியாவர். பரமனது பாதங்களில் நம்மைக் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கும் பெரியதோர் கடமையாம் அதிகாரம் பெற்றவருமவரே, அவ்விதமே குருநாதனையடைந்து அவனருளைக் கடைப்பிடித்துய்யும், தன்ளொணுப்பாக்கியமும் நுமதேயாகும்.

நீர் குருதேவரைத் தற்காலம் நம்பிக்கையாற் பரமாந்தரங்கத்தில் ஒப்புக்கொண்டு சத்தியம் விளங்கு முண்ணிலையில் அவரைத் தரிசித்துப் போற்றி வணங்கிவருவதுபோலல்லாமல், யதார்த்தத்தில் அவர் உளர் எனவறிந்துகொள்ளும்வண்ணம் ஸ்தூலேந்திரியங்களுக்குக் கோசரமாய்ப் பிரத்தியக்ஷமாகவுமரை நீர் தரிசனம் செய்துகொள்ளு நாள் எப்பொழுதாவது ஒரு சமயம் உமக்கு வாய்க்குமென்பதற்கையமில்லை. இப்பொழுதே பிரத்தியக்ஷமாய் அவரை தரிசித்து அவரது வசனங்களைக் கேட்டு அவரிடமணுகி ஸ்பரிசித்தற்குக் கிடைப்பினும் அவரதுண்மையாம் மேலுலகில் நீரும் வாசஞ்செயும் பக்குவமடைந்திருப்பினன்றி அவரை யுள்ளபடி யறியுந் திறல் நுமக்கு வாயாது. ஜீவன் முக்தனும் குருதேவன் தனது யதார்த்த வாழ்வை உயர்லக்ஷியங்கள் யாவும் பிரத்தியக்ஷப் பொருட்களாய் விளங்கும் மேற்பதவியில் அனுபவிக்கிறார். ஆதலின் அவரை யுள்ளபடி யறிய வேண்டுமாயின் அவருலகிற்கு நாமும் சென்று வசிக்கு மாற்றல் பெறவேண்டும். ஆகவே மிகவு முயர் நோக்கங்களையே பெருக்கிக் கொள்வதால் மனோ நிலையை யுயர்த்திக்கொண்டு குருதேவர் வாழுமுலகத்தையே எட்டுந் தன்மை நுமக்குங்கிட்டுமாயின் அக்காலை நீர் உமது ஸ்தூலேந்திரியங்களால் அவரைக் கண்டாலுங் காணுவிடினும் வித்தியாசமிராது. ஏனெனில் நுமது ஸ்தூலேந்திரியங்கள் யாவுமனித்திய வுலகத்தின் விஷயங்களேயாதலின், அவற்றால் மோசம்போகாது உண்மை நிலையெய்திய நுமது அந்தரங்கம் காணும் திருஷ்டிகள் பரம விசேஷங்களான சத்தியங்கள் என்பதற்கு ஐய

முண்டோ? காற்றில்லாவிடின் ஒரு மெழுகுவர்த்தி யெரியாது ஆயினுங் காற்று நீங்கியவிடத்தே மிகவதிகமாய்ப் பிரகாசிக்கு மின்சார வெளிச்சத்தை பாருங்கள்!; காற்றின் உதவியை யபேக்ஷிக்கும் சாதாரண தீபத்தைக்காட்டிலும் மின்சாரத்தின் பிரகாசத்தையுடையது சற்றேனுந் தாழ்ந்ததாகுமோ? அவ்விதமே நீரும் உயர்நிலைகள் எய்துங்காலை கீழுலகத்திய துணைகளான விந்திரியங்களின் சகாயத்தை யபேக்ஷித்து நிற்றல் அவசியமன்று. ஏனெனில் அப்பொழுதுமது ஸ்தூலேந்திரியங்களைக் காட்டிலும் மிகச் சத்தியம் விளங்கப்பெற்றதும், உயர்லக்ஷியங்களை தியான நோக்கால் நோக்காதிருந்து நோக்கவல்லதுமான சக்தியொன்று நும்முள்ளே பிரகாசித்து விளங்கும்.

ஆதலின் இதற்கு முன்னரே பலதடவைகளில் நீர் உயர்லக்ஷியங்களை மனதில்நாட்டி வந்திருப்பவராதலின், அத்தருணங்களிலெல்லாம் குருதேவரை உயர்திருஷ்டியால் கண்டவரேயாவீர். இப்பொழுது அவரை மிகவு நன்றாய்உமக்கு அறிய விருப்பமுளதாயின், அவ்வண்ணலின் கருணைக்குப்பாத்திரர்களான யாவருக்கும் நீர் உதவிபுரிதல் வேண்டும்.

குருநாதரோ மானிடர் யாவரிடமும் கருணைகூர்ந்தவராதலின் இம்மானிடர்மீது தமக்குள்ள கருணையை வரவர விஸ்தாரமாயும் நூதன நூதனமான ஸ்தானங்களின் வழியாயும் வெளிப்படுத்த விச்சைகொண்டவர். நீர் அக்குருநாதரை எவ்விதமேனும் அடைய வேண்டுமெனு மாசைகொண்டு முயற்சி செய்து வருவதாய்க் கூறுகிறீர். ஆயினும் உண்மையில் நீர் செல்லுமிடங்களிலெல்லாம் உம்மைச் சந்திக்குஞ் சகல ஜனங்களிடமும் தன்னன்பாம் பிரகாசத்தை வீசுதற்கு நும்மையோர் பிரதிபிம்பஸ்தானமாக்கிக்கொள்ளும்வண்ணம் நும்மையே சம்பாதித்துக்கொள்ளும் நோக்கமுடையவராய் குருதேவரே நிற்கின்றார். இவ்விரஹஸியத்தை யுணர்ந்து நீர் அவருக்கும்மைத் தனது கருவியாக்கிக்கொள்வதற் குதவி புரிதலுமது கடமையாகும். நீர் இக்கருத்திற்கிணங்கி யொழுகி வர வர அவரும் நும்மிடம் வாசம் செய்வதற்குத் தடையுமிராது.

அஃதெப்படியாகுமெனில் கூறுவாம். உம்மிடமிருக்கும் எல்லாச்சக்தி சாமர்த்தியங்களையும் சுற்றுப் பக்கங்களில் வசிப்போர்

கள் வரவர க்ஷேமமுற்று வாழ்வடையும் வழிகளை யேற்படுத்தி வருதற்கு அவரோ யுபயோகித்துவரத் துடங்குவார். உலகினர் யாவர் மீதும் அன்புடனும், குருதேவன் பெயராலும் எப் பரோபகாரங்களையும் ஒருவன் செய்துவரல் வேண்டுமென யான் முன்னொரு சமயத்தில் சிரத்தையுள்ள வொருவன் குருவை யடையும் வழி யாதென எனது குருநாதனை வினவியபொழுது அவர் எனக்கு விடையளித்தனர். இவ்வண்ணம் நீரும் பிரதிதினமும் பிரதி நிமிஷமுமே, பிறன் தனதுலகவாழ்க்கையின் சுமைகளை முன்னினும் லகுவாய்த் தாங்குவதற்காம் வழிகளை யாலோஜித்து வருதலும், அவ்விதமான வுதவிகளைப் புரியும்பொழுதெல்லாம் ஸ்ரீ குருநாதன் பெயராலேயே அவையனைத்துஞ் செய்யப்படுகின்றனவெனு நினைவையு மனத்துள் நினைந்துவருதலுமே நமக்குற்றதோர் வழியாகுமன்றோ!

அன்றியுங் குருநாதர் உலகின் க்ஷேமார்த்தம் தற்காலத்தில் யாது புரிந்துவருகின்றரெனவும், வருங்காலத்திற்கென யாது புரியச் சங்கற்பிக்கின்றனரெனவும் நீரூஹித்துணருதலு மவசியமாகும். ஏனெனிலவ்விதம் தெளிந்துகொள்ளாவிடில் அவருக்கு நீர் சஹாயம்புரிதலமையாது. குருதேவன் கடவுளொடெப்படி யைக்கியமடைந்தவரோ அப்படியே மானிடருடனும் ஒன்றுபட்டவர். உலகந் தழைப்பதற்கு கடவுள் செய்யும் சங்கற்பமாகும் ஆலோசனை யல்லது பிளானையும் அவர் அறிவர். கடவுளின் கருத்தாகும் உலகினர் யாவரும் பூரண ஆனந்தமடைதல் எப்பொழுது நிறைவேறும் என்பதும் அவருக்குத் தெரியும்.. ஆதலின் அவ்வுயர்பதவியாமானந்ததிலே மானிடகோடிகட்குக் கொஞ்சங் கொஞ்சமாய் கிட்டிவரும் வண்ண மோய்விலா துழைத்துவருகின்றனர். ஆகவே இதைத் தொழிலாகக்கொண்ட குருநாதனுக் குகந்ததோர் உதவிகளை நீர் செய்தற்கு, கடவுள் வகுத்திருக்கும் இப்பிரபஞ்சத்தின் பரிபாக மார்க்கமல்லது அதன் அபிவிர்த்தி முறையினது ஞான முமக்கு இன்றியமையாததுவாகின்றது. அவ்வழியல்லது ஒழுங்கு முறையை எவ்வளவிற்கு நீர் அறிந்துணருவீரோ அம்மட்டில் ஸ்ரீ குருதேவனும் அவ்வழியே யுழைத்துவருந் தனக்கும் நீர் சேவைபுரிதற்குபாயங்களை மென்மேலுமுமக்கே காட்டிவருவனன்றோ!

அதிகாரம் 3.

கடவுளின் பிளான்

"பிரபஞ்சத்தின் பரிபாகமார்க்கமானது கடவுளால் வகுக்கப்பட்ட பிளான் அல்லது ஒழுங்கே" யென எனது குருதேவன் மொழிந்தனர். மேற்றிசையாரது பிரத்தியக்ஷ பரிசோதனைகளை கற்றுணர்ந்தால் இப்பிரபஞ்ச பரிபாகத்தினியல்பை நாம் ஒருவாறு அறிந்துகொள்ளலாமாயினும், அதன் யதார்த்தத்தைத் தெளிந்துகொள்ளற்கு அம்மட்டில் நிற்றல் போதாது; பின்னை யாவற்றிற்குமாதாரமான மூன்று உண்மைகளை நாம் கைக்கொள்ளல் வேண்டும் அவை யாவன :—

(1) சேதனமென்பது எங்கும் நிறைந்த பொருள்.

(2) சேதனமெக்காலத்திலுமழிவடையாதது.

(3) சேதனம் பரிபாகத்தால் அபிவிர்த்தியடைந்து வருகின்றது.

இவற்றுள் முதலாவதாய 'சேதனமென்பது எங்குநிறைபொருள்' என்பதையாராய்வாம். சேதனமற்றது அல்லது ஜீவனற்றபொருள் என்பது ஒன்று கிடையாது. நமது கண்களுக்கு ஜீவனற்றதாய்க் காணப்படும் கல்லும் சேதனமுடையதுவேயாய், நம்மாற் பார்க்கப் படாததும் அறியமுடியாததுமான ஓர்வகையான உயிருடன் வாழ்ந்துவருகின்றது. கந்தமூலங்கள், மிருகம், மனிதர் இவற்றின் சேதனம் அல்லது உயிர் நமது புலன்களுக்குக் கோசரப்படுகின்றதாயினும் கல்லினுள் மறைந்துகிடக்கும் சேதனம், இவற்றிற்கு முற்றிலு மாறுபட்டதன்று. இவ்விதமே யியற்கையில் சேதனமிராத ஒரு ஊசிகுத்துமிடமுங்கூடவில்லையென்பதுவே சத்தியம் ‡ பிரபஞ்சத்தில் மேலுங்கீழும் எப்புறத்திலும் உள்ளுமாய் விரிந்துநிற்கும் ஏகமயமான சேதனம் அந்தர்யாமியாய் எப்பதார்த்தங்களையும் ஊடு

---

‡ இதன் உண்மை அடியில் வருவனவற்றால் உணர்க

"நவிலுங்கால் மேல் கீழ் நடுபக்கமெங்கும் சிவமொழிய வேறில்லைதேர்"

"நிரந்த வாகாய நீர்நிலந்தீகா லாயவையல்லையாயாங்கே

கரந்ததோருருவே களித்தனனுன்னைக்கண்ணுறக்கண்டுகொண்டின்றே

(திருவாசகம் கோயிற்றிருப்பதிகம்.)

ருவி வியாபிக்கின்றது. இவ்வேகவடிவான சேதனமும் கடவுளது இயற்கையின் ஒருவகைப் பிரகாசமேயாகும்.

இனி யிரண்டாம் விஷயம் 'சேதனமெப்பொழுது மழிவை யடையாது' என்பது; நாம் வாழுமிவ்வுலகம் மாறுதல்களு மரண முமே நிறைந்ததாகையால், எப்பதார்த்தங்களு முடிவில் மரணமடை யவேண்டியதென்றே நமக்குத் தோன்றுகின்றது. இவ்வுலக வியற்கையை யுற்றுநோக்கின் அஃது முழுமையும் முடிவில் ஒன்றினு லொன்று கொலையுண்டழியுமோர் ரணகளத்தின் கொடுமையே யுடையதெனப் புலப்படுகின்றது. ஆயினும் இஃதுண்மையன்று ஏனெனிற் கூறுவாம். எங்கு ரூபமாதிகள் விளங்குகின்றனவோ அங்கு மரணமு மாறுதல்களு மின்றியமையாதனவே யாகும் ஆனால் சேதனமாகும் உயிர் பரிபாகமடைய வடைய விர்த்தியைப் பெறுமாதலால் அவ்வந்நிலைமைக்கேற்ற உபகரணங்களாகும் ரூபமா திகளின் மாறுதல்கள் அவசியமாகின்றனவாதலின் சேதனத்தின் சௌகரியார்த்தமே ரூபங்களின் மாறுதல்கள் அல்லது மரணம் நிகழ்கின்றதுவேயன்றி வேறன்று என்பதே யுண்மை. உயி ருடை யொவ்வொரு வஸ்துவிற்கும் இருவகையான வியற்கை யேற்படுகின்றது. உலக பதார்த்தங்களால் நிருமிக்கப்பட்ட உட லாய் நிற்றலும், அவ்வுடலை நிர்மாணஞ் செய்யுஞ் சேதன மல்லது பிரக்ஞையாதலும் என்க. இவற்றுள் மரணமும் உடலல்லது உரு வத்தைமட்டுமேபாதிக்கும். சேதனமாகும் பிரக்ஞையோ என்றும் போல் மரணத்தின் பின்னரும் கடவுளிடத்திற் றங்கி நிற்பதுவாகி யழியாமலே நிற்கும். இதுவேயுண்மையாதலின் பிரபஞ்சத்தில் மர ணமென்பது எங்குமேயில்லை யென்பது. அஃதையறிந்துகொள்ளுந் திறல்வாய்ந்த பெரியோர் காணும் காக்ஷியாகின்றது. கோடைகால த்தின்முடிவில் தன்னிதழ்கள் யாவுமுதிரப்பெற்ற ஒரு 'ரோஜா' ச்செடியும் அப்பொழுதேயுயிரிழந்துபோகிறதில்லை; பின்னை தனது ஜீவனையுள்ளடக்கி நின்று சிறிதுகாலஞ்சென்றபின்னர் பழையபடியும் முன்னினுமழகிய விதழ்களொடு பிரகாசிக்கும்படி வெளிக்கிளம்புமன் றோ! அவ்விதமே தன் சத்துருவின் வாய்க்கிரையாய் உயிரிழக்கு மோர் மிருகமும் உண்மையில் சூட்சுமலோகத்தில் மறைந்து நின்று

பின்னர் முன்னிலுமதிக பலங்கொண்டதும் பக்குவப்பட்டதுமான உடலொடு ஜன்மத்தையடையுமென்பதில் சந்தேகமில்லை.

இந்நியாயங்களால் நாமறிந்துகொள்ளவேண்டியதியாதெனில், சேதனமானது தன்னியற்கையை யதிகமதிகமாய் விளக்கிக்கொண்டு வாழ்வதற்கே நூதன நூதனமாய் சரீரங்களாம் உருவங்களை நிருமித்துக்கொள்ளுகின்றதென்பதே. இக்கருத்தைக்கொண்டு ஏற்படுத்தப்பட்ட உருவமே ஜீவனது மென்மேல் விளக்கத்தைத் தடுக்குமாயின் உடனே யஃது ஓர் புறத்தேயகற்றப்பட்டு அதன் அம்சங்ளான பஞ்சபூதங்களாய்ப் பிரிக்கப்படுகின்றது. ஆதலினிவ்விதம் உடல்கள் உடைக்கப்பட்டு சிதறுண்ணும்பொழுதெல்லாம் அவற்றுண்ணின்ற சேதனங்கள் யாவும் பிரபஞ்சமெங்கணும் வியாபித்து நிற்கும் ஏகமாம் சேதனத்தின் அம்சங்களேயாதலின், [] அழியாத்தன்மையுடையனவேயாகி நிலைத்து நின்று கடவுளின் ஆக்ஞையால் உலகில் திரும்பிவந்து தத்தமக்கேற்ற வுருவங்களை மறுபடியும் சிருட்டித்துக் கொள்கின்றன.

இனி மூன்றாவதாகிய 'சேதனம் பரிபாகத்தால் அபிவிர்த்தியடைந்துகொண்டேவருகின்றது' என்பதை விசாரிப்போம். கடவுள் சர்வசக்தியழகு ஞானமன்பிவற்றின் நிறைவேயாதலால் தன்னாற் சிருட்டிக்கப்பட்டிருக்கும் யாவும் தன்னியற்கையோடியைந்தனவாகி தனதானந்தத்தையுங்கொள்ளும்படிக் கிச்சைவைத்து, யாதின்பாலும் நீக்கமற நிற்கும் தனதருளாற் றன்னாலாக்கப்பட்ட வண்டகோடிகளில் எவ்விடத்தும் எப்பொருட்குந் தன்னையே கொடுத்துக்காட்ட வுத்தேசிக்கிறார்.* இக்கருத்து நிறைவேறும்பொருட்டுப் பரமன் எவ்வுயிரிடத்துந் தங்கும் தன்னருட்பிராண சத்தியினுள், அவ்வுயிரனைத்தையுந் தூண்டும்படி, மென்மேலபிவிர்த்தியை நோக்கிச்செல்லும் இயற்கையுணர்வொன்றை ஸ்தாபித்திருக்கின்றனர். இதற்கே ஜகத்தின் 'பரிபாகம்' அல்லது 'விகாசமுறை' என்று பெயரிடப்பட்டிருக்கின்றது.

[] "பொருளனைத்துந்தரும்பொருளே கருணைநீங்காப்பூரணமாய் நின்றவொன்றே புனிதவாழ்வே" (தாயுமானவர்)

* "ஒழிந்ததொருபொருளில்லை, யுள்ளதெல்லாமவனேமுன் கழிந்தபொருள், மேலும் வரக்கடவபொருடானுமவன்" (பிரமகீதை)

இனிப் பஞ்சபூதங்களின் சேர்க்கையாகிய பிரகிருதியின்கண் பலவித சரீரங்களாகு முருவங்களை அவ்வச்சந்துவின் நிலைக்கேற்ற படி நிர்மாணித்துக்கொண்டுவருவது மேலேகூறிப்போந்த இவ்வியற்கையுணர்வேயன்றோ! முதலில் உலோகவர்கத்தில் கடவுளின் தன்மை சிறிது விளங்குகின்றது. அஃதினுமதிகம் கந்தமூலாதிகளில் வெளிப்படுகின்றது. பின்னுமதிகமாய் மிருகாதிகளிடம் கடவுளினியற்கை பிரகாசித்து முடிவில் சரவசரமான விப்பிரத்தியக்ஷ வுலகில் யாவற்றினு மேலாய் மானிடவகுப்பில் பரமனது விளக்கம் ஒளி பெறுகின்றது.

கடவுளது கருணையாலே யுலகம் பரிபாகமடைந்து வருமுண்மையை விளக்குமிவ்வாராய்ச்சியைக்காட்டிலும் நமக்கு அதிக வுத்சாகத்தைத் தரக்கூடியது வேறொன்றும் கிடைப்பதரிதாகும். உலோகமாதி வஸ்துச்சளின் நிர்மாணம், வளர்ச்சியைப்பற்றிக் கூறும் ஆராய்ச்சியாகும் ரஸாய நக்ஷத்திரத்தைச் சற்றே படியும். அதனாலுமக்குப் பிரகிருதியில் அணுக்கள் எவ்வளவு அழகுடன் ஒன்றோடொன்று சேர்ந்து 'துவியணுகம்,' 'திரியணுக' மாதி திரள்களாகி முடிவில் இச்சேர்க்கைகளால் 'உள்ளுருப்புகளுடையனவும்' அவையற்றனவுமான உருவங்களேற்பட்டு அவற்றின்கண் உயிர்வசிப்பதற்கிடமாக்கப்படும் 'அற்புதம்' நமக்குடனே தெள்ளிதின் விளங்கும். இவ்வித வுருவங்களின் நிர்மாணத்தின் ஒவ்வொரு விபாகமும் கடவுளின் ஆக்ஞையாலன்றோ! நடந்தேறுகின்றது. இவ்வியற்கையின் வியவஹாரங்களில் நூதனமாய் சக்திகள் கலந்து (தொந்தித்து) வேலைசெய்யும்பொழுதெல்லாம் அவற்றை யுள்ளிருந்து பிரேரிப்போனாகிய கடவுளது சிருஷ்டியின் திறம் சிறிது அதிகமாய்த் தென்படுகின்றது. இவ்வுலோக சிருட்டியுள்ளும் மிகத் தாழ்ந்த வஸ்துக்களை விட்டு மிகவுமுயர்ந்த பதார்த்தங்களாகிய ரத்னங்களின் நிர்மாணத்தைச் சற்றுய்ந்து பார்க்கின் எவ்வளவு முன்பின்னொப்பு, அழகு அந்தத்துடன் அத்தன் அஸ்திபாரம் (அல்லது பிளான்) முதலிலமைக்கப்பட்டு மிகவத்புதமாய் கடைசியில் அதன் பூர்த்தியான கட்டிடம் நிறைவேறுகின்றதென்பது விளங்கும். இவை யாவு முன்னிலுமதிகமாய் பரமனதியற்கையைப் பிரகாசிப்பிக்கின்றது.

இனிக் கந்தமூலவர்க்கத்தின் ஆராய்ச்சியான தாபர சாஸ்திரத்தை (Botany) யுற்றுநோக்குவாம். காடு கரை வெளிகளிற்சென்று ஆங்குள்ள செடிகளை மனதாரப் பார்வையிடும். வெறும் பார்வையொடு திருப்தியடையாமல் அவற்றுள் நிறைந்து விளங்குமுயிருடன் சற்று ஒன்றுபட்டு நில்லும். அப்பொழுது பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறையும் கடவுள் உலோகவர்க்கத்திலு மதிகமாய்த் தன்னையுமக்குக் காட்டிக்கொள்ளுகிறானென்பது இனிது விளங்கும். இனி யடுத்த மிருகவர்க்கத்தைப்பற்றிய வாராய்ச்சியைச் சற்றுக் கருதுவாம். விலங்கினங்களில் உள்வகுப்புகளான வெண்ணிறந்த ஜந்துக்களின் வேறு வேறான உருவங்களின் சிருஷ்டியையும், அவ்வவ்வினத்தின் ஸ்வபாவங்களையும்பற்றிப் படித்தறிந்துகொள்ளவேண்டும். இவ்விதம் பலவித மிருகங்களையும் பற்றித் தெரிந்துகொண்டபின் அவற்றின்மீது அன்புகொள்ளுவீராகில் கடவுளை மூடிய மூட்டங்களுள் மற்றுமொன்று இத்தருணம் விலகி அவர் சற்று முன்னினுமதிகமாய் உம்மால் அறியப்படுகிறார். இதையுந் தாண்டியப்பால் மனிதகோடிகளினியற்கையைக் கவனிப்பீராக. இம்மானிடர் குழாத்தின் அந்தரங்கத்துள் நுழைந்து, ஆங்கு தங்கிக்கிடக்கும் துன்ப மூட்டைகளையும் அவருடன் கலந்து தாங்க விச்வாசகொள்ளும் பக்குவம் நமக்கு எற்படுமாயின், முன்னினும் பன்மடங்கதிகமாய் கடவுளை நெருங்கியனுபவிக்கவும், அவருடைய வம்சமாகவே நீரும் விளங்குவதைக்காணவும் பாக்கியமடைவீர். இவ்விதம் அடிமுதற் றலைவரை அத்புதமாய் நடந்தேறிவரும் விகாசமுறையெனும் ஜகத் பரிபாகத்தை முழுவதுமாராய்ந்தபின்.நீர் அறிந்துணரவேண்டிய முக்கியமான விஷயமொன்றுண்டு. அஃதியாதெனில் மானிட வகுப்பிற்கெனக் கடவுளால் வகுக்கப்பட்டிருக்கும் பிளான் அல்லது பரிபாகத்தின் கிரமமே என்க.

மிருகவர்க்கமுழுமையிலும் அதன் பரிபாகத்திற் காதாரமான முக்கிய குணம் யாதெனவோர்ந்து பார்ப்போமாயின் அஃது 'தன்னைப் பேணி நிற்றல்' அல்லது சுவயநலம் பாராட்டல் என்பதுவேயென நாமறிவோம். இவ்வர்க்கத்திற் கடவுள் உடல்களல்லது உருவங்களின் சிருஷ்டிக்கிரமத்தை யேற்படுத்துகிறாராதலின் அவை

யவற்றிற்கு வேண்டிய வுணவு முதலியவற்றை யவையவை மற்றவைகளொடு போட்டிபோட்டுக் கிரஹித்துக்கொண்டாலன்றிச் சரிப்படாது. ஒவ்வோர் உடலும் இந்நிலைமையிற் சிருட்டிக்கப்பட்ட பின்னர், ஒன்றோடொன்று மோதும்படி செய்வதால் அதன் உறுதியைக் கடவுள் சோதிக்கிறார். இவ்வித சோதனையில் பலஹீனங்களாய் நிற்கு முருவங்கள் யாவற்றையுமப்புறப்படுத்தி சிதைத்து தூளாக்குகிறார். பலமுடையவைகளையோ, உடைபட்டுத் தூளாய்க்கிடக்கு மணுத்திரள்களால் நூதனமாய்ப் பின்னுமதிக பலமுடைய ரூபங்களை சிருட்டிக்கும்படி தூண்டுகிறார். இவ்விதம் சரீரங்கள் வரவர பலமுள்ளவைகளாறுற்றான் அவை விசித்திர விசித்திரமான விசேஷ வமைப்புகளைப் பெற்று, கடவுளும் ஏனைய சாமானிய வுடல்களில் பிரகாசிப்பிக்கமுடியாத தனதுயர் குணங்களை அவ்வுயர்வு பெற்ற விசேஷ வுருவங்களிடம் வெளிப்படுத்துதலும் சாத்தியமாகின்றது. ஆதலின் இம்மிருக சமூகத்துள நிலைபெற்று விளங்கும் ஸ்வபாவமாகிய வயிறு வளர்ப்பதற்கும் உயிரை ரக்ஷிப்பதற்கும் ஜந்துக்கள் ஒன்றோடொன்று கலகித்தலும் அவ்வித மிடைவிடாது செய்துவரும் யுத்தத்தில் பலஹீனங்களைக் கொன்று தள்ளிப் பலமுள்ளவைகளே பிழைத்து வருதலும் கடவுளானே இவ்வர்க்கத்திற்கென வமைக்கப்பட்ட கிரமமாகும். இம்மிருக வர்க்கத்தை நடத்துவதற்கே ஏற்படுத்தப்பட்டிருக்கும் தன் ஏஜண்டுகளின் மூலமாய்த் தகுந்த வுருவங்களையும் யவையவற்றிற்கு பொருத்தமான இனங்களையும் பொருக்கி யெடுத்து அவற்றுள் ஜந்துக்களை வாழும்படி செய்வதும், அஜ்ஜந்துக்களின் அபிவிர்த்தியைமட்டுங் கருதி அவற்றின் உடல்களைக் காலம் வந்தவுடன் உடைத்து எறிந்துவிடுதலும் அவன் காரியமே. ஆதலின் இம்மிருகவர்க்கத்தை நன்கு ஆராயின் அவற்றின் பரிபாக வபிவிர்த்திக்கு இன்றியமையாததான சுபாவ குணமாவது 'தன்னையே பேணுதல்' எனும் ஸ்வய நலம் பாராட்டுந் தன்மையேயாகுமென்பது நன்கு விளங்கும்.

இனி மானிடனோ இவை யாவையுங் கடந்தோனாதலின், சரீரமாம் துணையை ஒருவாறு அகற்றி ஆத்மாவை யணுகியே நிற்பவன். கந்தமூல மிருகாதிகளைக்காட்டிலும் பன்மடங்கதிகமாய் கடவுளின் மஹிமையைத் தன்னிடம் விளங்கப்பெற்றவன். மற்றவை

களைப்பார்க்கிலும் மனிதனே கடவுளின் பூரணமான பிரகாசமாவான். ஆதலின் கீழ்ப்படிகளிலுள்ள மிருகாதிகட்கு எது தகுமோ அக்குணம் இவனுக்குசிதமானதாகாது. மானிட பதவிவரை சரீரங்கள் ‘ தான் ’ எனும் ஸ்வயநலம் பாராட்டுங் குணத்தால் பரிபாலித்து வளர்க்கப்பட்டு வந்திருப்பினும், இனி மேல்ப்படிகளில் கடவுளது பிரகாசங்களுக்குத் தக்க ஸ்தானங்களாய் மானிடன் ஆகும்படி அபிவிர்த்தியடையவேண்டுமாயின் தன்னை மறக்கும் ஆத்மார்ப்பணமாகும் குணத்தைப் போற்றல் அவனுக்கின்றியமையாததாகும்.

இனி மானிடற்கென பரமன் வகுத்திருக்கு மிவ்வழியின் பயன் யாதோவெனில், மானிடசமூக முழுவதும் முடிவில் பூரணானந்தத்தை யடைந்து வாழ்வதே. கீழுள்ள வர்க்கங்களிற் கடவுளால் பிரகாசிப்பிக்க முடியாத உத்தம குணமாகிய தன்னை மறந்து பிறர் நலம்பாராட்டல் எனும் சுபாவத்தை எம்மட்டில் மானிடர் தழுவி நிற்கின்றனரோ அம்மட்டிற்றான் கடவுளது உன்னத வியல்புகளாகிய நிலைகளை யிவர் அடைந்து உண்மையான வானந்தம் பெருதல் கூடும். ஆகவே ஒவ்வொரு ஆன்மாவும் இப்பயனையடைய வேண்டுமாயின் மிகச் சுறுசுறுப்புடன் கடவுள் வகுத்த வழியாகும் மேற்கூறிய ஒழுங்கிற் கிணங்கி நடந்துவரல் வேண்டும். கடவுளுக்கு இவன் சகாயம் புரிதலும் இவ்விதம் ஸ்வயநலமொழிந்து பிறர் பொருட்டுழைப்பதாலேயே யாகுமென்பது இதனாற் பெறப்பட்டது.

இனி யுண்மையில் கடவுள் இச்சரவசரமான யாவற்றையும் படைத்து இவ்வித முறையில் நடத்திவருவதெல்லாம் மானிடர் யாவர்க்கும் ‘ தம்மை மறந்து ‘பிறர்க்குழைக்கு’ நற்குணத்தைக் கற்பித்தற்காகவேயன்றி வேறன்று. உலகங்களைச் சிருட்டித்து அவற்றுள் தனது ஜந்துக்களை நிரப்புவதும், உலகிற் பல கண்டங்களைச் சமுத்திரங்களுக்குமேல் கிளப்பிப்பின்னரைப்படியே யவற்றை யழித்துவிடுவதும், * பல பூமிபாகங்களிற் பெரும் நாகரீகங்களை

“காலமுந் தேசமும் வகுத்துக் கருவியாதி விரி வினையுங் கூட்டி யுயிர்த்திரளையாட்டும் விழுப்பொருளே” (சிதம்பரரஹஸியம். தாயுமானவர்)

“காலமொடு தேசவர்த்தமானமாதி கலந்து நிறை நிலை வாழி கருணை வாழி.” (தாயுமானவர். சிதம்பர ரஹஸியம்)

ஸ்தாபித்து அப்பாலவைகளைக் குறுகச்செய்து இருந்தவிடந் தெரியாமற் போகச்செய்வதுமாகிய இவை யாவும் மானிடர் இவ்வுத்தம குணத்தின் மஹிமையை யறிந்துய்தற் பொருட்டேயாகுமன்றோ'! பாருங்கள் இவ்வுலகில் ஜீவர்கள் ஸ்தூல சரீரங்களையடைந்து ஓர் தேசத்தில் பிறப்புற்று பல தடவை திரும்பித் திரும்பி வந்து இந்தப் பெருங்குணத்தின் ஓர் அம்சத்தையே கற்றுக்கொள்ளுகிறார்கள். பின்னர் இவ்விதமே இதர தேசங்களிலும் அவ்வுண்மையின் இதர அம்சங்களைக் கற்றறிந்துகொள்ளும்பொருட்டே ஜன்மங்களையடைகிறார்கள். இவர்கள் ஒரு சமயத்தில் புமான்களாகவும், மற்றோர் சமயத்தில் ஸ்திரீகளாகவும் பிறப்பிக்கப்படுவதும் இக்கருத்தின் பொருட்டே. அவரவர்கள் விதை விதைப்பதற் கேற்றவாறு சுகரூப பலன்களையோ துக்க பலன்களையோ அவரவர்களடையும்படி கடவுள் நியமித்திருப்பதுவும் இதற்காகவே. பற்பல நாடுகளில் எண்ணிறந்த நிலைகளில், யஜமானர், அல்லது ஏவலாளிக, அடிமைகள், கல்வி கற்பிப்போர், வைத்தியர், வியாபாரிகள் ஆகிய பலவகைத் தொழிற்களுள் இஜ்ஜீவர்கள் அவ்வுயர்குணத்தைப் பழகி யறிந்து கொள்ளும் வண்ணமே தகுந்த சௌகரிய சந்தர்ப்பமாதிகளைக் கடவுள் அமைக்கின்றனா. நாநாவித ஜாதியார், நாட்டினர் உயர்ந்து விருத்தியடைந்து கீர்த்தி படைத்துப் பின்னர் தாழ்ந்து சிறுமையிலழுந்துதலும், பல்வகைச் சமயங்கள், உண்மதங்கள், கல்வி, கேழ்வி, கலைகள், தத்துவவிசாரம் இவற்றி ஞராய்ச்சிகள் இவை யொருகாலத்திலெங்கும்பரவிப்பின்னர், அவை யோய்ந்து மறைதலு மிவையெல்லாம் அவனது பெருவாழ்வை நாமுந் தாங்கி நிற்றற்குத் தகுதியடையும்வண்ணம் திருவுளங்கொண்டு அவன் ஆடும் 'சதுரங்க' ஆட்டத்தில் 'இரக்கங்கள்' அல்லது காய்நகர்த்துதல்களேயாகுமன்றோ!

ஆதலின், ஐய, மிருகங்கள் பரிபாகமடைந்து மேற்படி யேறுதற்கு வழியான ஸ்வயநலம்பாராட்டலாந் தன்னைப் பேணுங் குணமும், அவ்விதமல்லாது மேனிலையடைந்த மானிட வகுப்பாளர்க்கு மேற்செல்லுதற்குபாயமாகும், தன்னையே லக்ஷியம் பண்ணுமல்

பிறர்பொருட்டுழைத்தல் அல்லது தன்னை தியாகஞ் செய்தல் என்னும் நெறியும் இவ்விரண்டும் உலகத்தை நிருமித்து நடாத்திவரும் நியதியினுலேற்பட்டதென நாமறிதல் வேண்டும்.

"குணமாம் பெருந்துறைக் கொண்டலே"......

....

பேதமில்லதோர் கற்பளித்தபெருந்துறைப் பெருவெள்ளமே"..........

"அல்லலறுத்தாட்கொண்டு, பேதை
குணம் , பிறருருவம். யானெனதென்னுரை
மாய்த்து கோதில முதனை"..........

"பர்வியேற்கு முண்டாமோ, பரமானந்தப் படழுங்கடல் சேர்ந்தாவியாக்கையானெனதென்றி யாதுமின்றியறுதலே" (திருவாசகம்)

(இன்னும் வரும்.)

சாந்திவசனம்.

இத்தொடரில், பிரம்மக்ஞானசங்கத்தாரால் வெளியிடப்பட்டு வரும் Adyar Pamphlets, Adyar Popular Lectures முதலிய சிறு இங்கிலீஷ் புஸ்தகங்களை, இங்கிலீஷ் பயிற்சி இல்லாத தமிழ் மெம்பர்களும், மற்ற அபிமானிகளும் படித்துத் தெரிந்துகொள்ளும் பொருட்டு தமிழில் மொழிபெயர்த்து, மாதமொரு புஸ்தகமாக வெளியிட உத்தேசித்திருக்கிறோம்.

இத்தொடர் சென்ற ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகையால் நிகழும் டிசம்பர் மாதம் வரையில் 12 புஸ்தகங்கள் வெளியேறவேண்டியதற்கு இப்புஸ்தகத்தையுஞ் சேர்த்து ஐந்தே வெளிவந்திருப்பதற்குக் காரணத்தையறிய நமது சந்தாதார்களாகிய அபிமானிகள் யாவரும் விரும்புவார்கள். நாங்கள் இதற்கு மூலகாரணமாய் ஒரு தர்ம பாடசாலையை ஆரம்பிக்கவேணுமென்று கொண்டிருந்த கருத்து சென்ற ஜூலை மாதத்திற்றான் நிறைவேறிற்று. அதற்குமுன்னிருந்த சில தடைகளால் சஞ்சிகைகளை நடத்தும் முயற்சி காலதாமதப்பட நேர்ந்தது. இப்பொழுது இடையூறுகள் யாவும் தீர்ந்துபோயினவாதலின் நமது சஞ்சிகை சில விசேஷ ஏற்பாடுகளுடன் தாமதமின்றி மேற்செல்லும். இம் மாதாந்தரப் புஸ்தகங்களின் வருமானத்தை இத்தரும பாடசாலையின் உபயோகத்திற்கே பிரயோஜனப்படுத்தத் தீர்மானித்திருக்கிறோம். இனி எவ்வாற்றானுந் தடைபெறாது அடுத்த ஜூன் மாதத்திற்குள் 12 சஞ்சிகைகளும் முடியும்படி நிறைவேறுமென்றுறுதியாய்த் தெரிவிக்கிறோம். ஆதலின் நமது நேயர்கள் யாவரும் சென்ற ஜனவரி மாதத்தைவிட்டு ஜூலை மாதத்தையே இதன் ஆதி மாதமாகக் கொள்வார்களென்றும், இச்சஞ்சிகையாம் மாதும் மேற்கூறிய தர்ம பாடசாலையெனும் கடவுளின் திருத்தொண்டையே செய்வதற்குத் துணிந்தனளாதலின் அத்தகைய பெருங் காரியத்தில் மென்மேலும் உத்ஸாகமடையும்படி முன்னிலுமதிகமான அபிமானத்தையுமவள்மீது வைத்து ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

முன்பணம் செலுத்தும் சந்தாதாரர்களுக்கு ௵ ஒன்றுக்கு
தபால் சார்ஜுள்பட ரூ. 1-8-0.

தனிப்புஸ்தகம் விலை 0-2-0 தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

தேவையுள்ளவர்கள் தஞ்சாவூர் ஜில்லா பேரளம் போஸ்டு திருமியச்சூர் சாந்தி ஆச்ரமம் காரியதரிசிக்கு எழுதக்கோருகிறோம்.